86

# உண்ணிக்காய்ச்சலில் இருந்து

# எம்மை பாதுகாப்போம்



- இது குறிப்பிட்ட ஒருவகை பக்றிரீயாவால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும்.

வெளியீடு,

சுகாதார கல்விசார் பொருட்கள் அலகு

சமுதாய மருத்துவத்துறை,

மருத்துவபீடம்,

யாழ்ப்பாணம்.

தயாரிப்பு உதவி

தி.பவித்ரா

(2008/FM/047)

மருத்துவபீடம்,

யாழ்ப்பாணம்.

2011

## யார் இந்நோயால் அதிகமாக பாதிக்கப் படுகிறார்கள்?

- விவசாயிகள்
- வீடுகளில் கால்நடைகள் அதிகமாக வளர்ப்போர்
- விலங்கு பண்ணைகளில் வேலை செய்பவர்கள்
- வீடுகளில் எலிகள் அதிகமாக காணப்படுபவர்கள்.
- வீட்டை சுற்றி பற்றை காணிகள் இருப்பவர்கள்.
- புற்தரைகளில் விளையாடும் குழந்தைகள்

## நோய் எவ்வாறு ஏற்படுகின்றது??

- இவை பெரும்பாலும் கடத்தப்படுவது புற ஒட்டுண்ணிகளால் ஆகும்.
- தெள்ளு, பேன், உண்ணிகள், பாலுண்ணிகள் இரத்தத்தை உறிஞ்சும் போது மனிதனுக்கு தொற்றும்.

**Chigger mite** எனப்படும் பாலுண்ணியே இங்கு காவியாக காணப்படுகிறது.



## பாலுண்ணி எங்கே வாழ்கிறது???



□வயல் வெளிகளை அண்டிய காடுகள் (Scrub jungle)

□பூங்காக்களில் உள்ள புற்செடிகள்

□சிறிய மரங்கள், புதர் கொண்ட பகுதி

□விலங்குகள் (எலி, கொறித்து உண்ணும் விலங்குகள்).

## காவிகள் எவ்வாறு மனிதனை அடைகின்றன.....?

நாம் புற்கள், மரங்களின் ஊடாக நடக்கும் போது அவற்றில் இருந்து நமக்கு தொற்றுகின்றது.

**வெற்றுக் கண்ணுக்கு பாலுண்ணிகள் புலப்படாது......**

இன
மண
கால
போ
கால
**நே**

(
அ
பெ
மன
காத
ஏற்ப

இவை இரத்தத்தை உறிஞ்சியபடி 24 மணித்தியாலங்கள் வரை எமது உடலில் காணப்படும். இவை கண்ணுக்கு புலப்படாத போதும் கடிப்பது போன்ற உணர்வு காணப்படும்

## நோயின் குணங்குறிகள்

- □காய்ச்சல்
- □வாந்தி (Vomitting)
- □தசை உழைவு(Myalgia)
- □சோம்பல் தன்மை
- □தலையிடி
- □மூட்டு நோ (Arthralgia)
- □உண்ணி கடித்த இடத்தில் எஸ்கார் (Eschar) எனும் அடையாளம் 60% ஆனவர்களில் காணப்படும்.

பெரும்பாலும் இவ் அடையாளம் உடலின் **மறைவான** பகுதிகளான **அரை, கமக்கட்டு அக்குள் காதின் பிற்புறம் வயிறு** ஆகிய இடங்களிலே ஏற்படும்..



**Eschar**

**தகுந்த சிகிச்சை எடுக்காவிடின்,**

- ☐ சிறுநீரக செயலிழப்பு (Renal failure)
- ☐ இருதய செயலிழப்பு
- ☐ நுரையீரல் அழற்சி (Pneumonia)
- ☐ கல்லீரல் வீக்கம் (Splenomegaly)

என்பன ஏற்படலாம்.

☐ 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் இந்த பின்விளைவுகள் ஏற்படும் சாத்தியம் அதிகம்.

## எவ்வாறு உண்ணிக்காய்ச்சலில் இருந்து எம்மைப் பாதுகாக்கலாம்.

**உண்ணிகள் கடிக்காமல் பாதுகாத்தல்.**

- ➢ புற்தரைகளில் நடக்கும் போது பாதணிகள் அணிதல் வேண்டும்.
- ➢ மண்ணினை கைகளால் அளையும் போது கையுறை அணிதல் வேண்டும்.
- ➢ பற்றைகளினூடு சென்று வந்த பின் சவர்க்காரம் இட்டு உடலை முழுவதுமாக கழுவுதல்
- ➢ உடலை முழுவதுமாக மூடக்கூடிய ஆடைகளை அணிதல்.

**உண்ணிகளை அழித்தல்**

- உடலில் இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்துதல்.

  உ-ம்: பென்சைல் பென்சோயிற் (B B Cream)

**உண்ணிகளின் வாழ்விடத்தை அழித்தல்.**

- இரசாயனக் கொல்லிகளைப் பாவித்தல்.

  உ-ம்: பென்தியோன் (Fenthion)

- பற்றைகளை அழித்து சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.

☐ இவ் உண்ணிக் காய்ச்சலை தகுந்த நேரத்தில் பொருத்தமான மருந்துகளை பயன்படுத்துவன் மூலம் **பூரணமாக** குணமாக்க முடியும்.

எனவே காலம் தாழ்த்தாது **தகுந்த** மருத்துவரின் உதவியை நாடுங்கள்…

